



ஓலை 103| ஓசை 226| சனவரி 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை

## பொருள்

தன்னையே தோண்டினாலும் தோண்டுபவர் விழுந்துவிடாதபடி தாங்கும் நிலம் போல, தன்னை வார்த்தைகளால் அவமதிப்பவரையும் மதித்துப் பொறுப்பது முதன்மை அறம்


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## கூரம் பாயினும் வீரியம் பேசேல்!

**பாவகை : வெண்கலிப்பா**

ஆகாதார் பிறருக்கே அகக்காயம் புரிகின்றார்.
நாகாயப் படுத்துவதே நடப்பாகி நிலைக்கிறதே;
பூகாயம் படுத்துகிற பொறுமையிலா வண்டினமாய்
பா'காயம் புதுப்பாவால் படுத்துகிறார் மரபினையும்:
வயலினிலே நிலைத்துமுளை வகையாக விடாநெல்லும்
தயங்காமல் விரிவானை தரக்குறைவாய் இகழ்வதுவோ?
கூரம்பாய் அரசாள்வோர் வீரியமும் உரைக்கலாமோ?
ஆரமாயி ருத்த(ல்) அழகு.

சிறகினையும் விரித்தேதான் சிறகடித்தால் ஈசலுமே
சிறகடித்து நடனமிடும் சிறப்புடைய மயிலாமோ?
மரணத்தில் அதுமாட்டி மாளாதோ? வீரியமாய்த்
தரமற்றுப் பிறரையுமே தரங்கெட்டுக் கூரம்பாய்க்
குத்தியேதான் கிழித்திடாமல் குணம்மிகுந்து உறவாட
எத்திசையும் மாந்தநேயம் எழுச்சியுறும்; இதைமறந்து
புயலாகப் புரட்டிடாமல், வெயிலாக வாட்டிடாமல்
இயல்பா(ய்) இருப்பா(ய்)இனி.




கோமானாய் இருந்தாலும் கோட்டானாய் இருந்தாலும்,
நாவானாய் இருந்தாலும், நமையாளும் இறையெனினும்,
உதடுகளைக் கிழிக்கின்ற உருகொண்ட அகரமாக.
மதகுகளை உடைக்கின்ற மாவெள்ளம் போலவின்றி,
ஏழையர்கள், வறியோர்கள், எளியோர்கள், நைந்தவர்கள்.
தாழைமணம் போல்மணக்கும் தகுதிநிறை உழைப்பாளர்.
நிலமுழவர் எனவுள்ள நிலவளத்தை வளர்ப்போரை.
அலந்திடாமல் காத்த(ல்) அரண்




நீரம்பும் நிலம்விளைக்கும் நிலவுயிரை உயிர்க்கவைக்கும்;
பாரம்பாய்க் படைகொண்டு பகைநாடாய் எண்ணியுமே
கூரம்பாய்க் குவலயத்தைக் குத்தியேதான் வீரியமாய்
நாரதுவாய் உயிர்களையும் நசுக்கியேதான் கிழித்திடாமல்
வேரம்பாய் மரம்வாழ வீரியமாய் படர்வதுபோல்,
சீரம்பாய் உலகுவாழ சிறப்புடனே திகழ்வதுவே
ஆறறிவு பெற்றததின் அரும்பயனாய் நலம்விளைய
ஆறறிவை வீரியமாய் ஆற்று.

**இலக்கணக் குறிப்பு:**

கலிப்பா வகைகளில் வெண்கலிப்பாவு மொன்று, இந்தப் பா வகையையும் இக்காலத்தில் யாரும் எழுதுவதில்லை. இப்படியொரு பா வகை இருப்பதை உணர்த்தவே இப்பாடலை எழுதியுள்ளேன். நான்கடி முதல் எத்தனை அடிகளாகவும் வந்து ஈற்றடி மூன்று சீர்களால் வெண்பா போல முடியும். கலித்தளையும் வொள்ளோசையும் கலந்து வரும். இரண்டிரண்டு அடிகளுக்கோர் எதுகை பெற்று வரும். அடி தோறும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை அமையும். தளையைப் பார்க்கத் தேவையில்லை. பெரும்பான்மையாக காய்ச்சீர்களே வரும். 2,3,4- ஆம் சீர்கள் அடி தோறும் நிரையசையில் தொடங்கி கலித்தளை வரும்படி எழுதுதல் வேண்டும். எண்சீர் மண்டிலம் போல மடக்கி உள்ளேதள்ளி எழுதலாகாது. மேலே உள்ள ஒவ்வொரு பாடலும் எட்டடிக் கொண்ட பாடல்களாகும்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

# தாய்மொழி

பா வகை : அடிமறி மண்டில ஆசிரியப்பா

1. முந்தித் தோன்றிய முதுமை அன்னை
சிந்தை உள்ளே சீர்மை நல்கும்
எந்தை பேசிய எழில்மிகு மொழியே
சந்தம் தந்தச் சுந்தரத் தமிழே!

2. நற்றமிழ் நவின்றே நாளும் வாழ்க
பற்றினை உளத்தில் பாங்காய்க் கொள்க
ஒற்றுமை நிறைந்தே
ஓதியே மகிழ்க.
கற்றிடு இலக்கியம்
கருத்தாய் நீயே!

3. என்னுளே கலந்தே
ஏற்றம் தந்தவளே
கன்னலாய் இனிக்கும்
காவியப் புனலே
தன்னுளே மறையைத்
தாங்கிய இறையே
இன்பம் தந்தே
இன்னல் போக்குவாயே.




கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

# வீழ்வதுவோ இழிவல்ல

பா வகை - குறள் வெண் செந்துறை
(எண் சீர் காய் காய் மா தேமா)



வாழ்வென்னும் பயணத்தில் வழுக்கல் நேர்ந்தால்
வலிமையுடன் எழுவதுதான் வழியே கண்ணே
வீழ்வதுவோ இழிவல்ல வெறுப்பும் வேண்டாம்
விதைத்திடுவாய் தோல்விகளை விருட்சம் ஆக

கண்ணீரால் மாறாது காலம் என்றும்
கவலைகளால் மூடாதே கதிரை நீயும்
புண்பட்டால் தவறில்லை புடமாய் எண்ணு
புதையாதே உடையாதே புயலாய் நில்லு

வெற்றிக்காய் ஓடாதே வீழ்ச்சி கண்டு
வினையாற்று நிறைவுடனே விடியல் உண்டு
முற்றுபெறா முயற்சிகளை முனைப்பாய்க் கொண்டு
முன்னேறு மென்மேலும் முதலாய் நின்று

கறுங்குயில்கள் கலங்கிடுதா கறுப்பு என்று
கானத்தை நிறுத்திடுதா கவலை கொண்டு?
மறத்தாலே விளைந்தவுந்தன் மனமும் எஃகு
மடியாமல் இடியாக மறவம் போற்று

மூச்சினைப்போல் உழைப்பதனை மூலம் ஆக்கு
முடிவுபெறும் இன்னல்கள் முறிந்தே அங்கு
கூச்சமின்றி குறையறிந்து கூர்மை எய்து
கூறுகளாய் உன்திறனும் கூறும் வெய்து

உனைப்பார்க்கச் செய்திடுவாய் உலகை வென்றே
ஒப்பற்ற உறுதியினால் உயரம் தொட்டே
புனைந்திடுவாய் காவியத்தை புதுமை காட்டி
புலரட்டும் வெற்றிமலர் பொலிவைக் கூட்டி

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# இதயக் கூடு

அந்தக் குரல்
என் செவிகளில் மெலிதாய்
ஒலித்துக் கொண்டிருக்கிறது.
உன் பின்னால்
காரணமின்றித் திரிவதை
நிறுத்த முடியவில்லை என்னால்.
இதோ இப்பெருமழை
சிறிது பொழிவிற்குப்பின்
நின்று விடலாம்.
அந்தக் குரல்
என் செவிகளில்
பலமாய் ஒலிக்கிறது.
உன் பின்தொடர்ந்தவன்
மிக அருகில்
உன்னை நெருங்கிவிட்டதாய்
நினைக்கிறேன்.
இப்பெருமழை முற்றிலுமாய்
நின்றுபோன தருணத்தில்
அந்தக் குரல்
சருகுகளில் சலசலத்தோடும்
அரவமாய்
என் செவிகளுக்குப் பக்கத்தில்
நெருக்கமாகவும்
தெள்ளத் தெளிவாகவும்
ஒலித்துக் கொண்டிருக்கிறது.
என் புஜங்களின் மேல்
சிம்மாசனமிட்டு
அமர்ந்திருக்கும் மழலையாய்
என்னிதயச் சிருஷ்டிக் கூட்டிலிருந்து
கீழிறங்க மறுக்கிறாய் நீ!



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# கன்னக்குழி அழகோ



கன்னக்குழி அழகோ
காரிகையின் வதனமோ
எண்ணம் யாவும்
ஏந்திழையின் நினைவே

வண்ணம் பூசிய
வஞ்சியின் வனப்பே
கொஞ்சும் மொழியால்
சிந்தை மகிழுதே

கெஞ்சும் விழிகளில்
காதல் பெருகுதே
கன்னக்குழி அழகோ
காரிகையின் வதனமோ

எழில் ஓவியமே
நாணத்தில் தலைசாய்ந்தாயோ
மலரின் இதழ்கள்
சிலிர்க்கும் தென்றலாலே

இதயம் இனிமையாகும்
உனது அன்பினாலே
ஈர்த்திட்டாய் பார்வையாலே
இணைந்திட்டேன் உன்னுள்ளே

அன்னத்தின் அம்சமே
தேனீயின் ரீங்காரமே
உள்ளமும் உயிரும்
உனக்கே அர்ப்பணம்

மாந்தளிரே மணிக்குயிலே
வசமானேன் அன்பே
நினைவில் நினைவலையாய்
நித்தமும் மலர்கிறாயே

காதல் அலைகள்
நெஞ்சத்தை தொட்டுச் செல்கிறதே
ஓயாத ஞாபகங்களில்
கலைந்திடாத நினைவுகளே

ஈர்த்திட்டாய் அன்பால்
அரவணைத்து ஆட்கொள்வாயே.

கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# கை கூடும்

கூதிர் ஒய்ந்து
முன்பனி தீண்டும்
வாடை தீர்ந்து
வேனில் அரும்பும்.
தீமை வீழ்ந்து
நன்மை எழும்.
காத்திருக்க காலம்
கை கூடும்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# நான் பூச்சியத்திலிருந்து வந்தவள்

நான் பூச்சியத்திலிருந்து வந்தவள் என்பதில்
பெருமை கொள்கிறேன்.
நான் நூறுகளை எட்ட வருடங்கள் பல கடந்து
காத்திருந்து அந்த நிலையை அடைந்திருக்கிறேன்.

ஆனாலும் பேராசையொன்று
ஆயிரங்களை அடைந்து எனக்கென
ஒரு அடையாளம் காண வேண்டும் என்பதில்.

இருப்பினும் நான் பூச்சியங்களைப் பார்த்து நகைப்பதில்லை
கைகொடுக்கவே விரும்புகிறேன்
காரணம் நிச்சயம் சில பூச்சியங்களுக்கு
நான் கை கொடுப்பதால் நூறாக இருக்கும் நான்
ஆயிரங்களாக பரிணமிக்க முடியும்.

நான் பூச்சியம் என்று சொன்னது யாவும்
வாழ்வில் ஈடேறத் துடிக்கும் ஆத்மாக்களையே
அவற்றுக்குக் கை கொடுப்பதன் வாயிலாக
என்னை இறைவன் மேலும் உயர்த்தி வைப்பான் என்பது
அசைக்க முடியாத நம்பிக்கை.

பூச்சியங்களைத் தட்டிக் கழித்தால்
நூறில் இருக்கும் என் நிலை ஒன்றிலல்லவா இருக்கும்.
மனிதர்களுடன் மனிதர்களாக வாழ்வதில் அல்லவா இருக்கிறது
இவ்வொட்டுமொத்த வாழ்வின் பேரானந்தமும்.



கவிஞர் சுமையா சுத்தீரம், நெல்லியகம. (அனுராதபுரம்)

# பெண் பூவே

பச்சைப் புல்வெளியில்
பூவின் புன்னகை

போட்டியிட்டால் தோற்கும்
மின்னும் பொன் நகை

மலருக்கு மகுடமாகியது
எதிர்கால கனவுகள்

தாய்க்கு முளைத்தன
நம்பிக்கையின் சிறகுகள்

பயின்றால் அழியும்
ஏழைகளின் ஏழ்மை

முயன்றால் ஒளிரும்
பெண்களின் திறமை

நதியென தொடரட்டும்
பெண்ணே உன் பயணம்

உறுதியாக எட்டும்
வெற்றியின் சிகரம்



கவிஞர் அனில் நிலவன், கொசவபட்டி, திண்டுக்கல்

# என் வாழ்வின் வசந்தம்

தாயவள் என்னைப் பத்து மாதம் கருவில் சுமக்க
வாழ்நாள் முழுவதும் என்னைத்
தோளிலும் மார்பிலும் சுமந்தவர்

என் சிறு உதட்டுப் பூரிப்பிற்காய் எதையும்
செய்யும் கடவுள் எனக்கழித்த வரம்

சேற்றினுள் தன் பாதம் புதைத்து
உச்சி வெயிலில் முழுமையாய் நீராடி

முத்து வியர்வைகள் முகத்தில் கோலம் போட
தன் பொன் மேனியை வருத்தி

சுமைகளை எல்லாம் சுகமாய் தாங்கி
என் வாழ்க்கைக்கு வெளிச்சத்தை பரிசழிக்கிறார்

என்னைச் சூளும் கஷ்டங்களை தூசு போல் தட்டி விடுபவர்
சூரியனைக் கண்டவுடன் மறைந்திடும் பனியாய்

இவரைக் கண்டவுடன் மாயமாகிறது இவளின் சோகங்களும்
அவர் ஒற்றை நெற்றி முத்தம் ஓராயிரம் கதை பேசியது என்னிடம்

அவர் விரல் பிடித்துச் சென்ற இடங்களும் பார்த்து ரசித்த காட்சிகளும்
வண்ண மயமானது பாவையின் விழிகளுக்கு

என்னைச் சுற்றி பல்லாயிரக் கணக்கான பாதுகாப்பு
அரண்களை உணர்ந்தேன் அவர் உடன் இருக்கையில்

அவரின் உச்ச கட்ட பாசத்தினை கண்டிப்பில் கண்டேன்
என்றும் முகமலர்வுடன் இருப்பவர்
கள்ளம் கபடமின்றி என் வளர்ச்சி கண்டு புன்னகைப்பவர்

கடவுள் கிறுக்கிய என் வாழ்க்கைப் புத்தகத்தில்
அதி சிறந்த பக்கங்கள் அவர் என்னுடன்
செலவிட்ட பொன்னான நிமிடங்கள்
இன்றும் என்றும் என் வாழ்வின் வசந்தம் அவர்



கவிஞர் முஸம்மில் ஜெஸி, பொத்துவில்

# முக்கடலிடை நிமிர்ந்த முப்பால்



கடலிடை நிமிர்ந்த முப்பால் என்றும்
கடல் கடந்தும் செல்லும் அப்பால்
எக்காலத்தும் எவர்க்கும் இப்பால் பொருந்தும்
அக்கறை கொண்டே தப்பாமல் அருந்துவோம்
அவனின்றி ஓரணுவும் எப்போதும் அசையாது
அவனியில் சிறக்க குறளின் இசைபாடு
பகவன் என்றே பகர்ந்தார் இறைவனை
பகலவன் போல் துணையாகும் தலைவனை
வான் மழையின்றி வையகம் தழைக்காது
தேன்மாரி பொழிந்தாலும் தாவரம் பிழைக்காது
இல்லறச் சிறப்பில் என்றும் அருமை
நல்லறம் நடாத்திய நீத்தார் பெருமை
வேந்தர் முதலாய் மாந்தர் ஈறாய்
ஏந்தி நிற்கும் முறைகளைச் செப்பினார்
மானிடர் அனைவரும் தப்பாமல் ஒப்பினர்
கல்வியின் புகழையும் கல்லாமையின் இகழையும்
செல்வாக்குச் சொற்களால் நெஞ்சில் அப்பினார்
மனித உரிமைகளை மாண்புடன் அறிவித்தார்
புனிதமுடன் வாழவே குறள்வழி தெரிவித்தார்
ஈரடி பாடினால் சீர்படுமே நாடு
போராடி. நின்றால் சீர்கெடும் வீடுமே
என்றென்றும் கற்றிடுவோம் திருக்குறள் ஏடு

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# சீவகசிந்தாமணி (எட்டு)



கண்ணன் கர்ணனுக்கு பிறப்புணர்த்தினான்
மண்ணாசையால் தந்தைக்கு செய்த துரோகம்
பெண்ணான தாய் பட்ட துயரங்கள்
கண்முன் நிழலாட, இனியும் வாளா இருக்கலாமா

கட்டியங்காரனை இப்பவே சென்று அழிப்பேன்
தட்டிக் கேட்கஆளில்லாமல் அலைகிறான்
வெட்டிப்போட்டு என் நாட்டை மீட்பேன்
கெட்டிக்காரன் சீவகன் ஆவேசமாக பேசினான்

"மைந்த, இது காலமன்று பொருத்திரு
இந்த ஒரு வருடம் காத்திரு
அந்தநாள் வரும் எண்ணியது செய்க
சொந்த மண்ணில் மறைந்தே இரு"


ஆசிரியர் கூற்றில் அமைதி, சீவகன்
"யோசித்து செயல்படு கவனமாக இரு
பாசத்தை துறந்து காடு சென்றேன்
வாரணவாசியின் அரசன் நான், கேள்"

வெள்ளி மலையில் உள்ள நகரம்
வள்ளல் உலோக மாபாலன் நான்
புள்ளிமான் போல் மகன் உண்டு
உள்ளம் மகிழ அரசனாக்கினேன்

தவவேடம் புனைந்து நோன்பு இருந்தேன்
கவனமாக இருந்தும் பூர்வசன்மத்து தீவினை
அவமானம் யானைத் தீ நோய் வந்தது
புவனத்தில் உன்னால் அந்நோய் நீங்கியது

நினக்கு ஆசானானேன் குணமானேன்
மன உறுதியுடன் கடமை ஆற்று
உன் தாயின் ஆசியே கவசமாகும்
கனம் பொருந்திய ஆசான் விடைபெற்றார்

பெற்றோர் கந்துகன், சுநந்தை மகிழ்ந்தனர்
சுற்றத்தார் சீவகனைப் புகழ்ந்து பாடினர்
உற்ற துணையாக'' ஞானம்'' கன்னியை
மற்றும் மணம் முடிக்கத் தொடங்கினர் (பாடல் : 368)



சிறப்புயர்
சீவகசிந்தாமணி

(அடுத்து திருமணம் நடந்ததாக
பாடல் இல்லை )
(நாமகள் இலம்பகம் முற்றிற்று)
(ஆக செய்யுட்கள் —408)
கோவிந்தையார் இலம்பகம் தொடரும்

கவிஞர் ந. திருக்கீராமு

# நிறம்

நிறங்கள் மாறுபடுகின்றன என
நான் மனிதனை பார்த்தே திண்ணம் அடைந்தேன்
எண்ணம் கொண்ட நிறம்
உன்னில் கண்டேன் கருமை என
பெருமை கொண்டேன் சட்டென
உரிமை கொண்டேன் நட்பென
நிறம் மாறும் மனித நீரென இரு
உன்னையும் வெளுக்கும் உண்மையும் சிறக்கும்
நிறம் மாறும் மனிதனே நிறத்தை வகுத்தான்
பின்பு ஏன் அவன் நிறம் போல் இருப்பான்
மனதிற்கு நிறம் இல்லை
சுமப்பதற்கும் கனம் இல்லை
சிந்திய கண்ணீர் சிந்தனையில்
கண்ணீர் வழிந்த பாதை கன்னத்தில் பதிய
கிண்ணத்தில் சிந்த அன்னம் கரித்தது
நினைவு வந்தது நீர் பட்டு
துணிவும் இல்லை தூரம் செல்ல மனமில்லை
துண்டான வாழ்க்கை துணைக்கு ஆள் இல்லை
தூய இன்பம் தூற்றி கொடுக்க
தூய கதவு திறந்தது விண்ணில்
மண்ணில் போதும் என



கவிஞர் இரா.மணிகண்டன், வங்கனூர்

# சுயநலம்

நானும் எனக்குமான தேடலில்
தோலுரிந்து போகிறது மனிதம்.

வாழ்வின் அர்த்தம் புரிந்து
பயணிக்கச் செய்வதில்
பாதைகளும் தடம் புரளுகின்றன.

பாழாகிப் போன உணர்வுகளின் கொந்தளிப்பு..
ஆழியின் ஆவேசத்தையும் விஞ்சியே விடுகின்றது.

சின்னஞ்சிறு மழலைகளின் புன்னகைக்குக் கூட
வேட்டுகள் வீழ்கின்றன.

விண்ணை முட்டும் விலைவாசியால்
விடுகின்ற மூச்சுக்கூட கனதியாகிச் சுடுகின்றது.

அழியாச் செல்வம் கல்வியைப் பெற
உள்ளதனைத்தையும் அழித்திடும் நிலை.

திசைமாறிச் செல்லும் பறவைகள் போல
திக்கித் திணறியே நாட்கள் கழிகின்றன.

மாற்றத்தை எதிர்பார்த்து ஏமாறுவதைத் தவிர
மாறாமல் தொடர்கின்றன வறுமையும் பொறுமையும்.

பொறுமை எல்லைமீறிபூமி அழிந்திடுமா.
புவியில் மாந்தர் வாழ்வு மலர்ந்திடுமா.

நானும் எனக்குமான தேடலில்
தோற்றுத் தொலைகின்றன மனிதமும் புனிதமும்.



கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹார், இலங்கை

# பகைமாட்சி

## அதிகாரம் : 87

தன்னிலும் வலியோர்
எதிர்த்தல் விடுத்து.
மெலியோர் பகையாதல்
விடாதுகொளல் விரும்பல்நலம்.

சுற்றத்தாரில் அன்பிலாதோன்
வலியதுணை யற்றோனாம்.
அவன்தன் பகைவலியை
ஒழிக்க எவ்வகையிலாகும்?

அச்சமும் அறிவின்மையும்
பிறரொத்தலும் பொருளீயாதலுமாம்.
பண்புடையோன் பகைவரால்
எளிதில் அழிந்தொழிவான்.

சினம்நீக்கி நெஞ்சத்துளடக்கி
ஆள மாட்டாதோனை.
பகைகொண்டு வெல்தல்
எவர்க்கும் எளிதாம்.

நல்வழியில் பொருந்தச்செயலாடாது
பழிபாரா தீப்பண்புடைய.
வன்குணத்தோன் பகைவரால்
எளிதில் வெல்லப்படுவான்.

அறியாமைக்கேதுவாம் சினத்துடன்
மேற்பெருகுங் காமத்தோனாய்.
திரிவோனின்பகை பிறரால்
விரும்பி ஏற்கப்படும்.




ஆக்கந்தொடங்கையில் உடனிருந்து
அதன்பின் கேடுபுரிவோனை.
எப்பொருள் கொடுத்தேனும்
பகைத்தல் நலம்.

நற்குணமில்லாது குற்றம்புரியும்
தன்மையோன் துணையற்றோனாம்.
அந்நிலையே யவன்பகைக்கு
நன்மையாய் அமையும்.

நீதியறியாது அச்சமுடைய
நெஞ்சுடையோரின் பகையை.
எதிர்த்திடின் இன்பங்கள்
நீங்காமல் துணைநிற்கும்.

நீதிநூல் கல்லாதானோடு
பகைகொண் டாக்கஞ்செய்ய.
இயலாதானுக்கு எக்காலமும்
புகழ்வந்து பொருந்தாது!

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# முடியப்போகுதே

வருடத்தின் முடிவாய்
கடைசி நாள் தானோ இன்று
இனியொரு தரம்
2024க்குள் நடமாடிடமுடியாது.

நினைவே தான்
இனியொரு முறையென்றாலும்
2024க்குள் அழைத்து
வர வழியைத்தாண்டி
வேறு வழியென்ன இருக்கும்.

இப்போது போன்று தான் இருக்கிறது
அதற்குள் முடிந்தாயிற்றா?
நினைத்தால் ஏதோவாகிறது.

இவ்வாண்டு என்ன தந்தது
என்ன எடுத்தது வென
எண்ணம் சலசலக்கிறது.

புதிதொரு காலம் வரப்போகுது
2025ம் வருமோ
வசந்த நாளாக எண்ணப் பயணம்
போகுமோ.

சென்ற ஆண்டின் முடிவில் தொடர்ந்த உறவுகள்
இப்போதும் உள்ளனரா எண்ணினால்
மனம் அச்சமாகுதே
பிரிந்தோர் சில
விலகினோர் சில
விடைக்கொடுத்தோர் சில
மரணித்தோர் சிலவென
காலம் கடந்தாயிட
விடைக்கொடுக்க காத்திருக்குதே
காலம்




காயமென்றாகியது
கசங்கிய பொழுதாகியதும்
வசந்தமென்றாகியதும்
நினைவை எட்டிப்பிடித்து
வருடம் உருண்டோடி மறைய
வயதொன்று கூடி 2025மலர
எண்ணம் புதிதாகி தூய்மையாகட்டுமே
வசந்த தென்றல் வாழ்வில் தொடட்டுமே
அனைவருக்கும் வருடம் புதிது நல்வாழ்த்துக்கள்

கவிஞர் சீ.ஷீரனாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம் (இலங்கை)

# வருடம் எண்கள்

கடந்த வருடத்தின் நினைவுகள்
புதிய வருடத்தின் வரவுகள் யாவும்
எண்களில் மாறுவதில்லை அவர்
அவர்களின் விடா முயற்சியே
விஸ்வரூப மாற்றத்தை தரும்
பயிற்சி முயற்சி வெற்றியை தரும்




கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரா, சிதம்பரம்

புத்தாண்டு

புத்தாண்டு பிறக்கட்டும்;
அனைவருக்கும் இனிமையாக;
அது பிறக்குமிடம்,நம் மனதாக இருக்கட்டும்.
மதுபான கூடத்திலோ, கடற்கரை சாலையிலோ,
கேளிக்கை விடுதிகளிலோ அல்ல.
நேற்று நள்ளிரவில் பண்பாட்டின் பரிணாமம்
அரிதாரம் பூசி குதியாட்டம் போட்டது.
தமிழ் நாட்டு இளைஞர்கள் ஓநாய்கள் போல
ஊளையிட்டு கோர தாண்டவம் ஆடி புத்தாண்டை வரவேற்றனர்,
கடற்கரை ஓரம். மானம் விட்டு,
மதி கெட்டு ஆடும் ஆட்டத்தில் கூட்டொழுக்கம்
கூடுவிட்டு ஓட்டம் பிடித்தது.
தனிமனித ஒழுக்கம் தலை குனிந்து நின்றது.
காவல்துறை இந்த திருவிழா கூட்டத்தில்
தன் ஆளுமையைப் தொலைத்து வேடிக்கை பார்த்தது,
அறியா சிறுமி போல.
பெண்பித்து பிணி கொண்ட நாட்டிலே வரைமுறை இல்லாமல்
இருப்பது தொல்லையே.
அரசும் நீதித்துறையும் சமூகமும் குடும்பமும் அவலத்தை
காணமல் வேறு பக்கம் நோக்குவது
இன்னும் ஒரு கேடுதான்.
புதை மண்ணுக்குள் புதையாமல்;
புத்தி கொண்டு மாற்றங்கள் தேடாமல் இருக்க;
உள்ளுக்குள் நம்மை நாமே இழத்தல் உறுதி தான்.

புல்லரின் போக்கு
நன்றென கொள்வது
நலம் அன்று
முற்றிலும் மாற்று.




கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# தேடல்

வண்டரித்த தானியத்தில்
உளுத்துக் கிடக்கும்
மாவுத்துகளாய்.
என் மனமரித்து
சிதறுகிறாய்
நினைவுகளின்
சருகுகளாய்!

நிறங்களற்ற வெண்மையிலே
அடங்கி நிற்கும்
நிறங்கள் போல
நிழல்களற்ற என்
நிஜத்தினிலே
நீந்துகின்றாய்
நிலவைப் போல!

காற்றுக்குப் போட்டு
வைத்த வேலி போல
என் கனவுக்கும் போட்டு
வைத்தாய் காலி மனை!

கற்க கற்க அடங்காத
கற்றலைப் போல்
நான் கத்த கத்த
அடங்கவில்லை உன்
காட்சிப்பிழை!

நூலிழையில் துடிக்கின்ற
இரை எடுக்கும்
சிலந்தியைப் போல்
உன் நரம்பிழையில்
துடிக்கிறது
என் நாடிகளின்
சுவாசப் பிடிப்பு!

வேறு நினைப்பு
எதுவுமில்லை
என்னைப் பிழைக்க வைக்க
உன்னைத் தவிர.

மூச்சு விடத் தவிக்கிறது
என் மூச்சுக்காற்று
உன்னைக் காண.

என்னை நானும்
பிரியும் முன்னே
உன்னைச் சேர
ஓடி வாராய்!



கவிஞர் ஆ. விஜயலெட்சுமி

# ஞாபகக்கூடை

பிடிக்காமல்
எதுவுமே செய்யக்கூடாது
தொந்தரவுகள்
அன்பை வீழ்ச்சி செய்யும்

தொலைதூரமாகினும்
நினைவுச்சிறகுகளால்0
நீந்திக் கடந்து விடலாம்
சலிக்காமல்
இந்த வாழ்வினை

போதும் போதுமென்று ஞாபகக்கூடை
நிரம்பித்தானே இருக்கிறது!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# அவள்



அன்பே உன் பார்வை பரப்பில்
நான் பசுமை காடுகளாய்

உன் விழிகளின் ஒளியில்
நான் வண்ண ஓவியமாய்

உந்தன் கண் அசைவில் நான்
கரை கடந்த புயலாய்

அழகே உன் கருவிழி ஓரத்தில்
நான் கசங்கி போன காகிதமாய்

உன் புன்னகை பூக்களில் நான்
சிதறிய இதழ்களாய்

ஆருயிரே உன்னுடைய சொற்களில்
நானும் தமிழின் அழகியலாய்

பெண்ணே உன் விழிகளின் ஆட்சியில்
நான் என்றும் சுயேட்சை வேட்பாளனாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# யார் சொன்னது?



அவள் அழகில்லையென்று
யார் சொன்னது.
அவள் அழகாகத்தான் இருக்க
வேண்டுமென உங்கள் வரையறைக்குள்
முடங்கிக் கிடக்க
அவளொன்றும் விலைமகளில்லையே

அவள் பேரழகானவள்
சற்று திமிர் பிடித்தவள்
பொய்யான ஒப்பனைகளற்ற
வறுமைகள் கொட்டிக் கிடக்கும் பணக்காரி
உண்மையில் அவளை
ஒரு கிணற்றுத் தவளையெனக் காண்கிறேன்

அவள் தான் சொல்கிறாள்
சற்றுப் படித்திருக்கிறாள் என
தன்னை சரியாக நியாயப்படுத்த
தெரியாத அவளை என்னவென்று
படித்தவள் என்பது

உண்மையில் இறைவனுக்கு உண்மையாக
இருப்பவர்கள் தூய ஆத்மாக்களல்லவா
மாற்றம் வேண்டி ஏதேதோ கிறுக்ககப்பட்டிருக்கிறது
என்பதற்காக அனுபவம் பேசுகிறது
எனும் அங்கலாய்ப்புடன் நியதிகளை முன்வைக்கும்
சமுகத்தில் வெகு சாதாரணமாக சொல்கிறேன்
அனைத்தையும் சிறு புன்னகையுடன்
கடந்து செல்லும் அவள்
உளத் தூய்மையுடனான பேரழகிதான்

சகோதரனே! அவள் என்று சொல்வது
நாம் தினம் தினம் கடந்து செல்லுகின்ற ஒவ்வோர்
பெண்களையும்தான்

இப்போது கேட்கிறேன்; யார் சொன்னது அவள்
அழகில்லையென்று புனிதமான படைப்பு என்பதனாலே
அவள் பெண்ணாக பிறப்பெடுத்திருக்கிறாள் இப்பிறவியில்

கவிஞர் சுமையா சுத்திரா?, நெல்லியகம் (அனுராதபுரம்)

# மழை



மழையெனப்போக இனம்புரியா
ஏதோவோர் ஈர்ப்பு சக்தி இழையோடுகிறது
தானில்லையா?
மழையோ, எனை எந்த வகையிலும்
அழைப்பதேயில்லை/
ஆனாலும் மழை பெய்கையில் மழையோடு
ஒத்திகைப் பார்க்காத
என் தருணங்கள் முழுமையாவதுமில்லை

மழைக்கதை இலைகளோடு நடக்கும் போதெல்லாம்
எனைச் சீண்டா மழை முத்தங்களோடு
கோபித்துக் கொள்கிறேன்
மழையற்ற கருமுகில்களை
புருவமுயர்த்தி வெறித்துக் கொள்கிறேன்

எப்போது மழை வந்தாலும் இறங்கி ஆடத் துடிக்கும்
என் மழலை மனம் கொண்ட
காதல் அந்த மழைக்கொரு வியப்பாகக் கூட இருந்திடும்
அது பற்றிப் பரவாயில்லை
இப்போது பெய்யும் மழையில்
நனைந்தேதான் ஆக வேண்டும்

அன்பர்களே, சற்றே பிடி தளர்த்துங்கள்
காய்ச்சல் வராமல் நனைந்து கொள்கிறேன்

கவிஞர் பாத்திமா மிஸ்னா, சவளக்கடை (கிழக்கிலங்கை)

# புத்தாண்டே வருக புதுமை பல தருக

வாழ்க்கையில் பல போராட்டத்தைக் கண்டேன்
நம்பிக்கை மட்டுமே என்னுடன் வந்தது
அயராமல் ஓயாது உழைக்கத் தொடங்கினேன்
ஏற்றமும் இறக்கமும் என்னுள் வந்தன
எதற்கும் அஞ்சாமல் பயணத்தைத் தொடர்ந்தேன்
முள்ளை மட்டுமே பார்த்த எனது
உள்ளத்தில் மகிழ்ச்சி  மலர்ந்தது என்றுமே
கண்களில் கண்ணீர் நிரம்பியது ஆனந்தத்தில்
யாருமே இல்லாத நிலையில் தனிமை
பலப் பாடத்தை கற்றுக் கொடுத்தது
எழுதினேன் எழுத்துக்களைக் கோர்த்து மாலையாக்கினேன்
மலர்ந்து மணம் வீசி மலர்ந்தது
பூத்து காயும் கனியும் தந்தது
தோல்விகள் தான் வெற்றிக்கு காரணம்
எதையும் கண்டுக் கொள்ளாமல் உன்
பாதையில் நீ நடந்திடு உன்னைத்
தேடி பல பேர் வருவர்
வாய்ப்புகள் ஒரு முறைத் தானே
கடந்தவை எல்லாம் கடந்தவையாக இருக்கட்டும்
புத்தாண்டில் புதுப்பொலிவோடு    வலம் வருவோம்
புதுமைகள் செய்து வெற்றியும் கண்டிடுவோம்




கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# டாட்டுக்களின் பிறப்பு

ஆசை ஆசையாக வைத்திருக்கும்
மிக்கிமௌசு பொம்மையின் புகைப்படம்
இடையிலிருந்து டாட்டுக்காரரின் கையில் நுழைந்து
மையினால் அப்பாவாகவே மாறிவிடுகிறது
அவள் சாய்ந்த அப்பாவின் வயதான தோள்கள்



கவிஞர் சே. கார்கவி கார்த்திக், நாகப்பட்டினம்

# தேன் சிட்டு



கால மாற்றத்தில்
காணாத புள்ளினம்
காந்தக் கண்கொண்டு
காதல் மலர்களுடன்

உண்மை உறவாடி
ஊரெல்லாம் சுற்றும்
உத்தமப் பெண்குருவி
உற்சாகமான தேன்சிட்டு

உழைப்புக்கும் முயற்சிக்கும்
முன்மாதிரி முன்னுதாரணம்
சுறுசுறுப்பும் வேகமும்
சோம்பேரிகளுக்குச்
சவால்விடுக்கும்

ஆண்சிட்டு அமர்ந்திருக்க
ஆடியோடும் பெண்சிட்டு
குஞ்சு மேனியால்
பஞ்சுபோல் பறந்திடுமே

மகரந்தச் சேர்க்கையின்
மணிமகுடம் தாங்கி
இயற்கையின் அழகுக்கு
இனிமை சேர்த்திடுமே

அசைந்தாடும் செடியிலே
கூடுகட்டி வீடுகூடும்
வீட்டு வாசலிலே
வடிவான குடித்தனமும்

மதுரமே வாழ்வாகினாலும்
பெற்ற பிள்ளைக்கு
பூச்சிகளை மென்று
கொடுக்கும் தனியழகு

கிருமிநாசினியும் தொலைத்தொடர்பும்
மிதமிஞ்சிய பாவனையால்
அமுதம் தேடும்
அழகிகளைக் காணவில்லை.

கவிஞர் சேஹு மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ, மதவாச்சி

# தூரப் போன சொந்தம்



உலகில் விலை மதிக்க முடியாதவை
விலைக்கு வாங்க முடியாதவை

வார்த்தைக்கு அடங்காதவை
வார்த்தையால் வர்ணிக்க முடியாதவை
தாய்ப்பாசம் ஒன்றேயாகும்.

அம்மா உன்னால் என்னை
பிரிய எப்படி மனம் வந்ததோ.
உன் மகளின் பிஞ்சு இதயம் பாதிக்கும் என்பது
உனக்கு தெரியவில்லையா?

தந்தை பிரிவு உனக்கு மட்டுமல்ல எனக்கும் புரியுமம்மா.
என்னை கரை சேர்க்கா விட்டாலும் தத்தழிக்க விடாதே!

என்னை நிழலில் வாழவைக்கா விட்டாலும்
சுடு மணலில் விட்டுச் சென்றாயே

நீயோ எட்டா தூரத்திலும்,
நானோ தாயிருந்தும்
அவல நிலையிலும் உள்ளேன் அம்மா!

என்னை சுற்றியுள்ள உறவுகளும்
தூர வைத்து பார்க்குதம்மா!
அதே போல் நீயும் தூரப்போன சொந்தமாக
ஆகிறாய் அம்மா

உன்னோடு சேர்ந்து வீறு நடைப்போட
அழைத்து சொல்லம்மா
உடன் பிறப்பின்றி வாழலாம்
நீயின்றி வாழ முடியாதம்மா

உன்னை அழித்தே புதிய
உலகம் என்றால்?
அந்த உலகமே எனக்கு வேண்டாமே.

சொப்பனத்தில் வந்து செல்லும் நீ.
என் நிஜத்தில் வர ஏனோ தாமதம்.

தாயும் சேயுமாக வாழ்வோம்
விரைந்து வா அம்மா.
இனிய உறவு உனக்காக
வழி மேல் விழி வைத்து காத்திருக்கிறது.

தாயே உன் பதிலுக்காக
பாசத்தை தேடும் மலர்.

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம் (கவி நிலா) அக்குறணை, கண்டி (இலங்கை)

# தந்தை

தங்களைப் பெற்ற நாள் முதல்
தனக்காய் அவர் ஆசைப்பட்டதாய்
எனக்கு எதுவும் தெரியாது

தன்னையே தேற்றிக்கொண்டு
தன் குடும்பத்துக்காக நாட்களை நகர்த்தும்
ஓர் உன்னத ஆன்மா அது

என் ஆடம்பர ஆசைகளும் என் சொகுசு பயணங்களும்
நனவானது என்னமோ அவர் சிந்தும் வியர்வையில்தான்

அருமையாய் எனக்கு பாராட்டுக் கிடைக்கும் சின்ன அவையிலும்
தந்தையை தேடுவது தான் பிள்ளை மனம்

தன்னையே மாய்த்து பல படி என்னை ஏற்றிவிட்ட பொழுதும்
சிறு புன்னகையின் ஓரமாய்
அங்கே நான் எதற்கு என்பது தந்தையின் பெருமிதம்

நம் ஆசை அறிந்தும் அவர் அழைத்துச் செல்ல
தயங்குமிடம் தான் அவர் வேலை பார்க்கும் இடம்
தன் சுமை என் பிள்ளைகளுக்கு தெரியக்கூடாது என்பதற்காக

தந்தை அழுவதில்லை என்பது நம் ஊகம்
எம்முன் அழுதால் பார்க்கும் சக்தி நமக்கு இருக்கப் போவதில்லை

கோடி உணர்வுகள் தன்னுள் இருந்தும்
எதுவுமே இல்லாததாய் எம்முன் வேடம் போட்டு
எம் கண்களில் கிரீடம் அணிந்து நிற்கும்
தூய்மையான உறவு அது



கவிஞர் அதீபா ஹஸன், காத்தான்குடி

# புத்தம் புது மலரே

இன்னுமொரு விடியல் கதவுகளைத் திறக்கின்றது
கோலத்தின் வர்ணம்போல் காலங்களும் வானவில்லாகட்டும்
காகிதத்தில் காலத்தை சுமந்துவரும் காலக்கண்ணாடியே
துன்பங்கள் யாவும் கண்ணாடிபோல் தூளாகட்டும்

கண்ட கனவுகள் கண்முன்னே கூடிவரவே
எண்ணங்கள் சிறப்புற்று இன்பங்கள் பெருகிடவே
படர்ந்த துன்பங்கள் பறந்து ஓடிடவே
மனதை உருக்கிய கவலைகள் மறைந்திடவே

ஏழ்மை நீங்கி பாழ்நிலம் பசுமையடந்திடவே
இளமை பொங்கி இனிமை ஓங்கிடவே
வளர்பிறையாய் தெளிவான அறிவுத்திறமை மிகுந்திடவே
இல்லாமையின்றி வளமை நிறைந்து வளர்ந்திடவே


மண்ணும் செழிக்க வருவாய் புத்தாண்டே
மக்கள் மனம்குளிர வருவாய் புத்தாண்டே
வல்லமை தந்திட வருவாய் புத்தாண்டே
வாழ்வில் வளம்பெற வருவாய் புத்தாண்டே



கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

# என் தலையணையும் என் கண்ணீர் துளியும்

என் தலையணையும் என் கண்ணீர் துளியும்
ஒன்றை ஒன்று காதலித்ததனாலோ என்னவோ
இன்று உங்கள் முன் நானும் ஒரு கவிஞனாய்.



கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

# அணைக்கட்டு

பாயும் ஆற்றின்
படுக்கையை பிடுங்கி கொண்டு!
சொந்த வீட்டையும்
உறவுகளின் கூட்டையும்
தெப்பமாக்கி விட்டானே!
நீர்த்தேக்கத்தில்
மலைகளை பிளந்து
மலை மலையாய்
குவிக்கின்றான்
மண்ணும் பாறைகளுயும்
ஓடும் நீரை உயர்த்த
ஆற்றின் அடியில்
அடைக்கலம் கொள்கிறது
ஆணிவேர் கொண்டொரு
அணைக்கட்டு!
இரவிலும் சூரியன் கொண்டு
உறங்காது உழைக்கின்றன
இயந்திரங்கள்.
புதுமையான இந்த புதிருக்காகவா
ஆண்டொன்றுக்கு அரைவாசி நிலம்
தற்கொலை செய்து கொள்கிறதோ.
நீர் உயர்ந்த பின்
ஊரையும் கொன்றுவிடுமோ!
உரு தெரியாமல்



கவிஞர் திருமதி மோகன், நாவலப்பிட்டி (இலங்கை)

# கல்லூரி நண்பர்கள்

வண்ண வண்ணக் கனவுகளோடு
கல்லூரியில் காலடி வைக்க!
வாழ்த்துக்களோடு கரம் கோர்க்கும்
புத்தம் புதிய நட்பு!
வகுப்பை நிராகரிப்பதோ
கேன்டீனில் காபி குடிப்பதோ!
பிடித்த கதாநாயகன்
பின்னால் போவதோ!
அடிதடியாய் ஆணவமாய்
அரசியல் பேசும் அடாவடியோ!
எண்ணியதை முடிக்க
கூட வரும் நட்பு!
கண்மூடித்தனமாக நட்புக்காக
எதையும் செய்து நட்பைத்
தக்க வைக்கும் மாண்பு!
கல்லூரியில் கண்டெடுத்த நட்பு
காலந்தோறும் களிப்புடனே
கைகோர்த்து வரும்!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# காலைப் பனி

காலைப்பனி ஒருவகை
ஒருமையை கொணரும்.
விண்ணையும் மண்ணையும்
ஒருசேர நடனமாட வைக்கும்
எது எது, யார் யார் என்ற
எல்லைகளை அழிக்கும்
அனைத்தையும் ஒன்றாகக் கலக்கும்
மென்பனியின் மாயம்



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# புதிய பறவைகள்

அவ்வப்போது
வீட்டிற்கு
கடனாளியாகவே
திரும்பி வருகிறேன்
கையேந்தியவர்களுக்கு
போட முடியாத
சில்லறைகளுடன்

கோடிகளை கொட்டினாலும்
நேத்திக்கடன்களில் நிறைந்தாலும்
கடமைகளின் நியாயங்கள் மட்டுமே
கடவுளின் உண்டியலில்
காணிக்கையாகின்றன

அடிக்கும் காற்றில்
இலைகளும் உதிர்கின்றன
பறவைகளும் பறக்கின்றன
மரம் தன் வேர்களை
பலப்படுத்துகின்றது
துளிர்க்கும் இலைகளுக்காகவும்
புதிய பறவைகளுக்காகவும்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# விடை தேடும் பயணம்



ஒவ்வொரு மனிதனுக்கும்
ஒவ்வொரு விதமான மனநிலை
பல கனாக்களோடு
பயணிக்கும் வாழ்வுதனில்
எத்தனை எத்தனையோ சறுக்கல்கள்.

மீண்டும் எழுந்து
நிற்க முயன்றிடவே
சுற்றி இருப்பவர்களின்
அவச்சொற்கள்,
கிடைக்குமா? கிடைக்காதா?
என்ற மனக்குழப்பங்கள்.

முயன்றுதான் பார்த்திடுவோமா?
என்ற மனதைரியம்
மாயமாகும் உலகில்
மாயமாகிடும் சில உறவுகள்.

வாக்குறுதி அளித்து
மீறப்படும் சந்தர்ப்பங்கள்
யாருமின்றி தனியே நின்ற பொழுதுகள் என
சுழலும் காலத்தின் நடுவே
ஒவ்வொருவரது வாழ்வும் பந்தாடப்பட்டும்
விடை தேடியே பயணிக்கிறதே.

கவிஞர் சியானா றிஸ்மி, புத்தளம்

# முரண்பாடு

என்றென்றும்
நேசமும்
தொலைவும்
முரண்பட்டது தான்
வாழ்க்கை எனும் வரையறையில்.



கவிஞர் கீர்த்தனா பு

# கனவுகள்

நீலத்தில் மட்டுமா கனவுகள்
நீங்கா வண்ணமனைத்திலும் வருதே
நீக்கமற எண்ணங்களின் நகலாக
நீக்கிடுதே நடுநிசி துயிலையும்

நீச்சமாகிடுதே பல நேரங்களில்
நீந்தி மேலெழும்புவதே இடர் ஆகிடுதே
நீட்டித்து வந்து தொலைந்திடுதே
நீண்ட நாள் துயர்தருதே

நீர்த்து போய் சாம்பாலாகிறதே
நீளும் இரவதிலே
நீயிருக்க நான் எங்கு போவேன் என
நீலாவிடம் சண்டையிடுதே

நீதியோடு நியாயமும் பேசிடுதே
நீரு பூத்த நெருப்பாக சத்தமிடுதே
நீவி விடுதே தாயாக என் சேயாக
நீளமாய் நினைக்கையில் மறக்கிறதே

நீரில்லா நேர தாகமாக
நீத்து போய் பறந்திடுதே!



கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# உடன் பிறவா உறவு



அன்பான அண்ணா!
உனக்காய் தவமிருக்கிறேன்
உன்னை முழுமையாக
பார்க்க நேரில் வருவாயென

முகம் காட்டி புன்னகைத்தாய் அலைப்பேசியில்
முகவரி தந்தீர் மெல்ல சிரித்த வண்ணம்

சொல்லாமலே போனீர்
என்னை கவிஞனாக மாற்றி

வெள்ளி வானில் நீங்க
ஒரு தங்க தட்டு

சொல்லாமலே இருக்கிறீர்
நாடு விட்டு அண்ணாவே!

நீங்கள் எனக்கு தந்த நம்பிக்கை
இன்று கம்பீரமாக இருக்க செய்கிறது என்னில்

உங்க வருகைக்காக நாம் காத்திருக்கோம்
என் தாயின் கருவரையில்
பிறக்கா விட்டாலும்

நீங்கள் என் சகோதரனுக்கும் நிகரில்லை

கை கோர்த்து பூ பூத்த சாலை நடுவே
கதை பேசி வியப்படைய செய்வேனே

மீண்டும் உம் வரவை எதிர் பார்த்தவளாக
காத்திருக்கிறாள்
அறிமுகமில்லாத அறிமுகத்தில் அறிமுகமான
உம் உடன் பிறவா உறவு

கவிஞர் அஹ்லா ஹபீப், அக்குறணை

# தோல்வியடையும் பிரயத்தனங்கள்



பிரயத்தனங்கள் மேற்கொண்டும்
பலனில்லையென்று மூலையில் முடங்கிக் கிடக்காதே.

கால ஓட்டத்தில் வெற்றிக்கொடி நாட்ட முன்னெடுக்கும்
பிரயத்தனங்கள் தோல்வியுற்றாலும் அது நிரந்தராமாகி விடாது.

தோல்விகளை கண்டு அஞ்சி உன்னிலக்கை கைவிட்டு விடாதே.

மண்ணீன்ற மானிடர் தானே விண்ணைத்தொட்டார்
தாமதங்கள் என்றும் வீனையாகிப் போகாது.

கூண்டில் அடைப்பட்ட சிறகுடைந்த பட்சியல்லவே நீ

சுதந்திரமாய் இலக்கோடு பயணிக்கும் பட்சி நீ
எந்நிலையிலும் பிரயத்தனங்களை கைவிடாமல்
ஒரே வேகத்தில் பயணி.

இலட்சிய பாதையிலே வெற்றியை விட தோல்விகளே அதிகம்.

தோல்விகள் தாம் அற்புத பாலமாய் உருவெடுத்து
வெற்றியை நோக்கி அழைத்துச் செல்லும் பாதைகளாகுமே.

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், அக்குறணை

மரணமற்ற பறவை நான்
பிரபஞ்சமெங்கும் பறக்கிறேன்
எனக்கு சிறகுகள்
உன் நினைவுகள்

பொருளற்ற ஒலிகளாகவே
உங்களின் வசவுகள்
எப்போதோ கற்றுக்கொண்டேன்
பஞ்சில்லாமல் காதடைக்க

கானல் நீராய்
அரசு வேலை
முயற்சித்து முயற்சித்து
தள்ளிப்போகும் திருமணங்கள்

நிச்சலனத்துடன் புன்னகைக்கிறது
பேரிடரில் இயற்கை
மனித தவறுகளுக்கு
தன்னை பொறுப்பேற்று

என்னளவில் நானொரு
பஞ்சப் பரதேசியே
என்னிடம் அபகரிக்க
உங்களுக்கு ஏதுமில்லை



கவிஞர் ராஜ் ஆரோக்கியசாமி, பிச்சாண்டார் கோவில்

# புதுதெம்பாய் புது வருடம்

பழையன கழிந்து புதியன வருதலும்
பழமை அனுபவத்துக்குப் புதிய தெம்பே
ஆண்டொன்று சென்றதும் உண்மை
ஆண்டொன்று வந்ததும் நன்மையே
இளமைக் குறைந்து முதுமை அதிகரித்தாலும்
வருடப் பிறப்பின் புதிய மாற்றமே
வாழ்வின் துன்பங்கள் ஒழிந்து அழியவே
வளமான வாழ்வு தொடர்ந்து வருமே
மனித உயிர்களின் மகத்துவம் காத்திடவே
இனிய பருவமாய் புதுவருடம் பிறந்ததே!




கவிஞர் சோ. ஸ்ரீதரன், இலங்கை

# எண்ணத்தில் ஏதோ



உன்னெதிரே ஓயாமல் அலைவீசும் பெருங்கடல்!
உன்னுள்ளே எண்ண அலைகள் எழும்பிடுதோ?
எண்ணற்ற அலைகள் எழும்பிவரும் கடற்கரையில்
ஏன் தனிமையில் தலைகவிழ்ந்து அமர்ந்தாயோ?
துள்ளி விளையாடும் பள்ளிப் பருவத்தில்
துவண்டு நீயமரக் காரணம்தான் என்ன?
பள்ளிக் கல்வியினை பாரமாய் உணர்ந்தனையோ?
கட்டிய மணல்வீட்டைக் கடலலை கரைத்ததோ?
கடலலை உந்தன் கால்வருட மறுக்கிறதோ?
கடலின் ஆழத்தைக் கற்பனை செய்தாயோ?
கடற்காற்று உந்தன் காதிலென்ன சொல்கிறதோ?
ஆழிப் பேரலையால் சோகத்தை அறிந்தாயோ?
ஆழமான சிந்தனைகள் அரும்பிடுதோ உன்னுள்ளே?
எழுகின்ற கற்பனைகளை எழுதிட வழியில்லையோ?
நண்பர்களுடன் பிணக்கோ? தனிமைத் தவமோ?
பெற்றோரிடம் பெருங்கோபம் நீ கொண்டனையோ?
பெருமழையால் பாதிப்போ? ஆழிமழைக் கண்ணனிடம்
மார்கழியில் வாழும்வகை மழைதர வேண்டுதலோ?
புறமுதுகைக் காட்டி அமர்ந்திருந்தது போதும்!
சிரிப்புடன் நின்முகத்தை சீக்கிரமாய் காட்டிடுவாய்!
அறிவிற் சிறந்தவனாய் ஆகிடுவாய் பின்னாளில்!
அரிய படைப்புகளை அளித்திடுவாய் உலகினிற்கே!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

# உன் தூரத்து நினைவு

உன் தூரத்து நினைவுதான்
பாரத்தை கொடுக்கிறது.
அந்த தூரத்து நிலவுதான்
என் பாரத்தை குறைக்கிறது.
நேரத்தை மறந்து நான்
உன் நினைவில் அமிழ்கிறேன்
காலத்தை கடந்து தான்
கவலையில் ஆழ்கிறேன்.
அந்த தூரத்து நிலவிற்கு
மனமெல்லாம் சோகமோ
அதனால்தான் என்னவோ
முகமெல்லாம் கறைகள்.
என் பாரத்தை குறைத்திட
பாடலைத் தேடினேன்
இரவில் ஒரு இசைத்தட்டு
இரவு வானில் சுழல்கிறது
முகாரி ராகத்தையே கானமாய்
பொழிகிறது.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# வையத்தை அடக்கியாள்

பா வகை: எண்சீர் குறள் வெண் செந்துறை.
காய்+காய்+காய்+மா.
காய்+ காய்+காய்+ மா

புவியினையே ஆண்டிடவே புரிந்திடுவாய் நன்மை!
பூத்திடுமே வெற்றியெங்கும் அறிந்திடுவாய் உண்மை!
குவிகின்ற வாகையிலே பணிந்திடுவாய் வாழ்வில்!
கூர்மதியால் கொள்கையிலே வென்றிடுவாய் உலகில்!

அறத்துடனே வாழ்ந்திட்டால் அனைத்திலுமே பெருமை!
ஆழியாக உயர்ந்திடுவாய் இதிலில்லை பொய்மை!
பிறப்பிற்கே சிறப்புசேரும் பிறருக்கே வாழ்வாய்!
பீடுபெற நடந்திடவே வேட்டையாடி வெல்வாய்!

ஆண்டிடவே தரையினையே ஆளுமையும் வேண்டும்!
ஆளுகின்ற உத்தியிலே வெற்றியுமே தாண்டும்!
பண்பினிலே சிறந்துமேநீ பாரினிலே வாழ்வாய்!
பாலினது தூய்மைபோல வாழ்ந்திடுவாய் மாண்பாய்!

கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# தன்னம்பிக்கை

தடைகளைத் தகர்த்து
தன்னம்பிக்கையுடன் எழுந்திடு
தரணியும் உன் வசமே!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# பெரினும் பெரிது கேள்

அரிது அரிது மானிடராய் பிறத்தல்
பெரிது பெரிது கல்வியால் சிறத்தல்
அன்பாய் வாழ்தல் உயிர்களுக்கு உரியது
அனைவருக்கும் வழங்குதல் உயிரினும் பெரிது
இளமையில் கற்றலும் கற்றவழி நிற்றலும்
வளம் பெற்று வாழ்தலும் பெரிதேகேள்
வானளவு தானுயர்ந்து பிறர் உயர
தேனாய் நீட்டும் உதவிக்கரம் பெரிது
பதவி வந்தால் ஆடி நிற்காமல்
உதவி புரியும் உள்ளம் பெரிது
வறுமை வந்தாலும் செழுமையை நோக்கி
பெருமையோடு வைக்கும் சிற்றடி பெரிது
அடுக்கிய கோடி பெறினும் தன்னிலை
கடுகளவும் மாறாமை என்றும் பெரிது
துன்பங்கள் ஆயிரம் துயர் தந்தாலும்
இன்பமாய் எண்ணி ஏற்றல் பெரிது



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

### இங்கே

கேள்வியை விட
உடனடியாய் பதிலுக்கு
முக்கியத்துவமும்

சொல்லப்படுவதைவிட
சொன்னது யார்
என பார்ப்பதும்

கேள்விப்பட்டதை
உறுதிபடுத்திகொள்வதைவிட
பகிரப்படுவதும்

விவாதங்களில்
கருத்துக்களைவிட
நான் சரி என
நீருபிக்க முயற்சியும்

கேட்கப்பட்டதை
புரிந்துகொள்வதை விட
அது மற்றவர்களால்
எப்படி பார்க்கப்படுவது
என்பதும்

இங்கே அதிகம்

****

### உள்ளுக்குள்ளே

பிடித்த உணவு
ரசிப்பு இல்லாமால்
இயந்திரத்தனமாய்
வாயில்

மகிழுகின்ற
நகைச்சுவை
காணொளி
வெறும் பார்வையாய்
தொலைக்காட்சி பெட்டியில்

உற்சாகம் கொடுக்கும்
திரைப்படபாடல்கள்
வெறும் ஒலியாய்
செவிகளில்

விரும்புகின்ற
கலந்துரையாலில்
எண்ணிக்கைக்கணக்கில்
இருப்பாய் மட்டுமே

இவையெல்லாம்
உள்ளுக்குள்ளே
தீவிர சிந்தனையில்
இனம் புரியாசோகத்தில்
அதிக பதட்டபயத்தில்
எதிர்பார்ப்பின்
ஏமாற்றத்தில்
இழந்த வேதனையில்



கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

கருணைக்காசு கொடுப்பாய்
பிச்சையெடுக்கிறேன்
மனசைக் கொடு
*

ஏற்ற அம்புகள்
விழியில் இருக்க
வில்லாய் வளைகிறேன்
*

கண்ணுக்குள் கண்ணீராய்
உன்னைப் பார்த்ததும்
ஒட்டிக்கொள்ளும் உதடு
*

உனக்கும் எனக்கும்
இடைவெளி கேட்கிறேன்
உன்னை உணர.
*

நான் பாவம்
கழுவிவிடு
உன் புண்ணியத்தால்
*

உன்னைப் பார்த்ததும்
விலங்குகள் பிணைத்தன
சுதந்திர மனிதனை.
*

எப்போதும் உன் நினைவு
எங்கே நான்
யாரிடமும் சொல்வதில்லை
*

முகவரி எனக்கில்லை
உன்னைச் சொல்வேன்
என்னைக் காட்ட
*

வாடிய மனம் வளர
உன் சந்திப்பு நீர்
எப்போது வரும்
*

உடைந்த கனவுகளில்
உன் வீடு வேண்டும்
நீ தெரிய.
*

பூ மணம் பூவுக்கில்லை
என் மனம் எனக்கில்லை
அனைத்தும் உனக்காக
*

நாணத்திரையில்
ஒத்திகை பார்க்கிறாய்
என்னிடம் பேச.
*

ஒருமுறை வெடித்தாய்
ஒவ்வோரு நாளும்
இதயத்தில் சேதம்



கவிஞர் இளையவன் சிவா

# பஞ்சபூதம்

நிலம்,நீர்,தீ வளி,வெளியாய், அப்பு,வாயு தேயு,பிருத் விஆகாஷ்
என்பனவாம் ஐந்தினையே, "பஞ்சபூதம்" என்றறிவோம் நாமெல்லாம்!
மேல்வெளியின், தீப்பிழம்பின், பகுப்பொன்றே, நிலமாகி, நீர்சூழ்ந்து,
சுற்றிவரும் பல்வளியாய், நாம்காணல் கூடுவதே! பொறுமைக்குக்
காட்டிடுவோம் பூமிதனை! வாழ்விடமே அதுதானே? மேற்புறத்தே
விழைவனவும், கூழுள்ளில் உள்ளனவும் மாப்பயனைச் சேர்த்திடுமே!
நீரதனில், தேங்குவதும், அசைவதுவும், பற்பலவாய்க் காட்சிதரும்!
முத்ததுவும், சங்கதுவும், பாசிவகை, மீனமும், மக்கட்கே!
துப்பாகும், துப்பாக்கும்,இவ்விரண்டும், கொண்டதுவே! நீரின்றி
அமையாது உலகன்றோ? தீயதுதான் மூள்வகைகள் ஆக்குதற்காம்!
பல்கருவி செய்திடற்கும் நற்றுணையாம்! பல்லணிகள் காண்போமே!
வாசமிகு தென்றலது நாம்மகிழும் மென்காற்றே! காற்றுதானே
நம்மூச்சு! காற்றாலை மின்னாற்றல் மாப்பயனை ஈந்திடுமே!
பரந்திருக்கும் விரிவான வெளிதானே காண்நிலத்தின் மேற்கூரை!
மாமழையை ஈந்திடுதே! புள்ளினத்தின் நடைபாதீ! துய்ப்போமே!




கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# பஞ்சதன்

எண்ணெய் பிசுக்கு தூண்கள்
கோவிலில்.
கோடான கோடி வேண்டுதலின் அடையாளம்

****

ஞானத்தால்
ஞாலத்தில்
வானத்தில்
ரயில்.
மெட்ரோ

****

பான் இந்தியாவில்
பான் பராக் படிக்கட்டுகள்
பெங்களூர் சப்வே

****

அனைத்திற்குமான
முதல் தீர்வு
அமைதி

****

நீயின்றி அமையாது
உலகு, அழகு
அழகுலகு
****

சாணி கரைத்த கைகள்
சானிடைசர் தடவுகின்றன

****

கஞ்சத்தனம்
வாழ்க்கைக்கு நல்லது
வார்த்தையில்

****

தொட்டிப்பழக்கம்
மீன்களுக்கு
முட்டும்



கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன்

# பூத்துக்குலுங்கும் புத்தாண்டு வருகவே!

வெய்யோனின் இளம் ஒளி கீற்றுப் போல
கங்கையும் காவிரியும் சேர்ந்து வரும் புதுப்புனல் போல
இளம் நங்கையின் புது வதனம் போல
பஞ்சவர்ண கிளியின் நிறம் போல
கருங்குயிலின் கானம் போல
மழைக்கால மேகம் கண்டு ஆடும் மயில் போல
புல்லாங்குழலின் இனிய நாதம் போல
கோயில் மணியின் ஓசை போல
நாட்டிய மங்கையின் சலங்கை ஒலி போல
நாதஸ்வர இசையின் மங்கள நாதம் போல
நீர்வீழ்ச்சியின் அருவி போல
அழகிய வண்ண மலரும் அதன் நறுமணமும் போல
வானில் ஒளிரும் நட்சத்திரக் கூட்டம் போல
சந்திரனை கண்டு மலரும் அல்லி மலர் போல
தமிழும் இலக்கணமும் இணைந்தது போல
பாட்டும் பரதமும் சேர்ந்தது போல
மழலையின் தேனினும் இனிய குரல் போல
கவிஞனும் புலமையும் சேர்வது போல
ஆங்கில புத்தாண்டே நீ வருக வருகவே!

தமிழ் புத்தாண்டுக்கு பெயர் உண்டு
ஆனால் உனக்கு என்ன பெயர் வைப்பது?
செல்வ செழிப்பான , ஆரோக்கியமான,
வளமான ஆண்டாக கருதுவோமே!
365 நாளும் உன்னோடு நாங்கள்
பயணிக்கப் போகிறோம்.
நாங்கள் துன்பத்தைக் கண்டு துவளாமலும்
இன்பத்தைக் கண்டு மகிழாமலும்
ஒரே நேர்கோடு பாதையில் அழைத்து செல்வாயா
என் செல்வ ஆண்டே!




கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி , ஊத்தங்கரை

# பகைவனுக்குமருள்வாய் நன்நெஞ்சே!

அன்பை அள்ளி வழங்கிடு
பகைவனுக்கும்.

எதிரி என்பதே
எதிர் மறையன்றோ?

உலகமே உள்ளத்தின்
பாசத்தால் இயங்கிட.

உருக்குலைய வேண்டுமோ
நெய்த நினைவுகள்?

குற்றம் செய்யாதவன்
மனிதனே அல்ல.

தீமை செய்யாமலிருப்பதே
நற்செயலின் விதையன்றோ?

நிமிர்ந்து
வானம் பார்ப்பதே
இறைவனுக்காக!

ஆண்டவனை மனிதரில்
பகைவரில் தேடுவோம்.

வான் வழங்கும் மேகநீர்
எல்லோருக்குமன்றோ?

இதயத்தின் நேசமழை
எல்லோரையும் நனைக்கட்டுமே!



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

## அத்தியாயம் 5 மும்பை முயற்சி

''சொல்லு பழனி, எதற்காக மும்பை வந்தாய்?''

எதாவது வேலைகிடைத்தால் வசதியாக இருக்கும். எத்தனை நாள் தான் தங்கை இறந்த சோகத்திலேயே சுற்றித் திரிவது. வாழ்க்கையில் இருந்த ஒரே சந்தோசம் அன்புத் தங்கை அவளே போய் விட்ட பிறகு என்ன வாழ்க்கை என்றுதான் முதலில் மனதில் எழுந்தது. அப்புறம் தான் அம்மாவை காப்பாற்ற வேண்டும் என்று எதாவது சம்பாதிக்கலாம் என்று கெட்டும் பட்டணம் போ என்று பெரியவர்கள் சொன்னது போல மும்பையை நாடி வந்தேன்.''

''நீ தான் நல்ல உழைப்பாளி தானே. ஊரிலே நல்ல வேலை செய்து கொண்டிருந்தவன் தானே. நான் ஊருக்கு வரும் போது கூட நீ மோட்டார் பைக்கில் சுற்றித்திரியும் போது, நீ உன் வயலில் வேலை செய்வதைப்பார்த்தே பொறாமைப் பட்டிருக்கிறேன். மும்பையில் வந்து என்ன வேலை செய்யலாம் என்கிற முடிவில் வந்தாய்?''

"ஊரிலே இருந்தால் திரும்பத் திரும்ப தங்கையின் நினைவுகளே வந்து கொண்டிருக்கும். மனதிற்குள் கோபமும் எரிச்சலும் தான் கொப்பளிக்கும். அதை விட இடமாற்றம் இருந்தால் வசதியாக இருக்கும் என்று மும்பை வந்தேன். உனக்கு ஏதாவது பிரச்சினை வந்தால் சொல்லு, நான் வேண்டுமானால் தங்குவதற்கு வேறு இடம் தேடிக் கொள்கிறேன்.''

''சே! ஏன் என்னை அப்படி பிரித்துப் பார்க்கிறாய். நீ வந்ததிலிருந்து மும்பையில் அதுவும் தாராவியில் உன் நடவடிக்கைகள் , நீ நடந்து கொள்ளும் விதங்கள், உன் போக்கு கொஞ்சம் வித்தியாசமாகத் தெரிந்தது. அதனால் தான் கேட்டேன்.''

''என்ன பைத்தியக்காரன் மாதிரி நடந்து கொள்கிறேனா?''

''சே! எதற்கெடுத்தாலும் விதண்டாவாதமாகவே பேசுகிறாய். உன் கண்ணில் ஏதோ கோபமும் வெறியும் தெரிகிறது. தங்கை இறந்த துக்கத்திலிருப்பவன் மந்திரி வலம்புரி மாதவனின் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்ள தயாராகிப் போகிறாய். அது தான் வித்தியாசமாகப் பட்டது.''

# அத்தியாயம் 5 — மும்பை முயற்சி

''அது ஒன்றுமில்லை சிவா. கொஞ்சம் மனமாற்றம் தேவைப்பட்டது. ஏதாவது திரைப்படம் பார்க்கப் போகலாம் என்றால், இந்தி புரியாது. ஓடுகிற தமிழ்ப்படங்களும் ஒன்றும் சரியில்லை. அதனால் தான் உன்னிடம் கேட்டுக் கொண்டு மந்திரியின் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன்.''

''அது சரி. வா.... போய் உன்நண்பனைப் பார்த்து விட்டு டீ குடித்துவிட்டு வரலாம். அவன் எப்படியாவது உனக்கு வேலைவாங்கித்தருவான். ஆமாம், இனி மும்பையில் தங்கி விடுவதென்று முடிவு செய்துவிட்டாயா?''


''எந்த முடிவும் இப்போது சரியாகப்படவில்லை. போகப் போக காலம் தான் முடிவுசெய்யும். அது சரி உன் பிரஸ்ஸிலே ஏதாவது வேலை கேட்டு பாக்க முடியுமா? ஒரு சிகரெட் தா...'' என்று கேட்டான் பழனி.

சிகரெட் எடுத்து ஒன்றை பற்றவைத்துக் கொண்டு, இன்னொன்றை பழனியிடம் கொடுத்து, அவனுடைய சிகரெட்டையும் பற்றவைத்துவிட்டு ''என்னுடைய பிரஸ்ஸில் இப்போது வேலை எதுவும் காலியில்லை. பார்க்கலாம், எப்படியும் உனக்கு கூடிய சீக்கிரம் வேலை கிடைத்து விடும். ஆமாம், எப்போதும் ஏதோ வெறி பிடித்தவன் போல் கோபத்தோடு காணப்படுகிறாய்... சோகமாக இருக்க வேண்டியவன் இப்படி இருக்கிறாய் என்பது தான் ஆச்சரியாமாக இருக்கிறது.'' என்றான். ''என் முகமே அப்படித்தான்.'' சிகரெட்டை ஆழமாக உறிஞ்சி மூக்கு வழியாக புகையைவிட்டான்.

இரவில் தூங்கிக்கொண்டிருக்கும் போது பழனியின் கனவில் அவனுடைய தங்கை வெள்ளை உடையுடன் வானத்திலிருந்து வந்து வந்து ....கொண்டிருந்தாள்.

முதலில் பழனியைப் பார்த்து சாதாரணமாகச் சிரித்தவள், திடீரென்று கேலியாகச் சிரிக்க ஆரம்பித்தாள் "ஏய்.. என்னைப் பார்த்து ஏன் கேலி செய்கிறாய்.'' என்றுகேட்டான். ''என்ன அண்ணா... பயந்து விட்டாயா? நான் தூக்குப் போட்டு இறந்து போனதற்கு காரணமானவன் அங்கே சுகமாக உலாவிக் கொண்டிருக்கிறான். நீ... இன்னும் அவனை விட்டு வைத்திருக்கிறாய்.''

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை



அவன் உயிரோடு இருக்கும் வரை என் ஆன்மா எப்படி சாந்தியடையும்? அவனைத் தீர்த்துக்கட்டி இந்த உலகத்திற்கு அனுப்பு.''

"நான் உன்னைப் பிரிந்தால் அடையும் துயர் அவனுடைய மனைவி மக்களும் உணர வேண்டாமா?''

''ஏன் இன்னும் தயங்குகிறாய்? ஏன் பயமாக இருக்கிறதா? அவனை நீ கொலை செய்தால் நீ தூக்குத் தண்டனைக்குப் போக வேண்டும் என்றுப யமாயிருக்கிறதா?

''அவன் என்னைக் கதறக் கதற விரட்டும் போது எப்படி அலறி ஓடினேன். கண்டிப்பாக என் வேதனை உனக்குப் புரியும். நீயும் அவனைக் கதறக் கதற கொலை செய்ய வேண்டாமா?''

''அந்த மாதவன் எப்படி இவ்வளவு மகிழ்ச்சியாக உலவிக் கொண்டிருக்கிறான். என்னைப் போல எத்தனை அப்பாவிப் பெண்கள் அவனால் அபலையாகி இறந்து போயிருப்பார்கள்.''

''அவர்களுடைய ஆன்மாக்களும் என் ஆன்மாவோடு சேர்ந்து சாந்தியடைய வேண்டாமா? எப்போது அந்த வலம்புரி மாதவனைக் கொல்லப் போகிறாய்?'' என்று கர்ச்சித்தாள்.

''கூடிய சீக்கிரம் அவன் உயிரைப் பறிக்கிறேன். அவனைக் கொல்லாமல் எனக்குத்தூக்கம் கிடையாது.'' என்றுகத்தினான். ''டேய்..... யாரைக் கொலை செய்யப் போகிறாய்?'' என்று நண்பன் எழும்பினான்.


எழுந்த பழனி கொஞ்சம் குழம்பிப் போய் கண்ட கனவை நினைத்து, ''ஒன்றுமில்லை நீதூங்கு.'' என்றான்நண்பனிடம். ''என்னடா, என்ன விசயம். யாரைக் கொல்லாமல் விடமாட்டேன் என்கிறாய்?''

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

## அத்தியாயம் 5 — மும்பை முயற்சி

"ஒன்றுமில்லை. வெறும் கனவு ஒன்று கண்டேன்." கண்களைக் கசக்கிக் கொண்டன் பழனி. "மனதில் உள்ளவைகள் தான் கனவாக வெளிவரும். யாரை பழி தீர்க்கணும் என்று நினைத்தாலும் எல்லாவற்றையும் மறந்து விட்டு உன் வேலைக்கு முயற்சிசெய்." என்று சொல்லி விட்டு நண்பன் சிவா தூங்கப் போனான்.

எழுந்த பழனி, "இனி எப்படி இந்த வலம்புரி மாதவனை நெருங்கப் போகிறேம்?" என்று யோசித்தவாறு புரண்டு படுத்தான்.




தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# கெடா வெட்டு

## நூல் அனுபவம்

எழுத்தாளர் திரு.வாமு.கோபம் ஐயா அவர்கள் தமிழ் இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டவர் கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர்களுடைய படைப்புகளை வாசித்திருக்கிறேன். இந்த ஆண்டு அவர் வெளியிட்டுள்ள "கெடா வெட்டு" நாவல் நமது கைக்குக் கிடைத்தது.




கொங்கு மணம் சார்ந்து எழுதும் எழுத்தாளர்களில் மிகவும் முக்கியமானவர் திரு.வாமு. கோமு ஐயா என்று நினைக்கிறேன். என்னைப் பொருத்தவரை அவரை நான் சிறுகதை ஜாம்பவான் என்றேக் கூறுவேன்.

கெடாவெட்டு நாவலும் ஈரோடு மாவட்டத்தில் உள்ள சென்னிமலைப் பகுதியில் உள்ளக் கிராமங்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது. நாவல்களில் திருமணம் ஆகாத வாலிபரின் ஏக்கமும் அவர்கள் அனுபவிக்கும் பாடுகளும் தெரிகிறது. தாயை நேசிக்கும் மகன், மகனை கண்ணும் கருத்துமாய் பார்க்கும் தாய் என ஆரம்பிக்கின்ற இந்த நாவலில் ஈரோடு திருப்பூர் பகுதி மக்களின் வாழ்வியல் நன்கு பேசப்படுகிறது.

சந்திரசேகரன் கதாபாத்திரம் மிகவும் அருமை, பெண் பார்க்கும் படலத்தின் தானாவதி சுப்பிரமணி அவர்களின் எப்படியாவது கல்யாணத்தை முடிக்க வைக்க வேண்டும் என்று அரும்பாடு படுகின்ற செயல் திறனுக்கு சொந்தக்காரர் அவரது செயல் பாடும் மிகவும் அருமையாக இருக்கிறது.

பஞ்சாயத்துத் தலைவர் சின்னமலை அவர்களிடம் பணி புரியும் புலி எலி கையாட்களின் செயல்பாடும் அரசியல்வாதிகள் சார்பாக மக்களுக்கு போடும் கும்பிடு பற்றியும் நையாண்டியாகவும் எதார்த்தம் கலந்தும் இருக்கிறது.

இரா.மதிராஜ்


# கெடா வெட்டு

## நூல் அனுபவம்

இப்படி எழுதுவது வாசகர்களை மிகவும் ரசிக்க வைக்கிறது. உலகம் எதற்கு இயங்கிக் கொண்டிருந்தாலும் அதில் முக்கியமான நிகழ்வாக டீக்கடை வாசலில் இருவர் உட்கார்ந்து இருக்கும். நிலைமையை எழுத்தாளர் கதையில் சொல்வது மிகவும் அருமையாக இருக்கிறது. ஒரு காரியத்தை விரைவில் முடிக்க வேண்டும் என்றால் அவர்களை சாலை ஓரத்தில் இருக்கும் டீ கடைக்கு அழைக்கச் செல்வது அவசியம் என்பதை கதை மீண்டும் உணர்த்தியது.

இப்படியாக பல்வேறு சுவாரசியமான தகவல்களை கதையாக கண் முன் நிறுத்தி உள்ளார் ஐயா திரு வாமு. கோமு அவர்கள், அனைவரும் வாசிக்க, கதை களத்திற்க்கு செல்ல அவசியமான நாவல் தான் கெடாவெட்டு,
வாழ்த்துக்கள் திரு. வாமு. கோமு ஐயா தொடர்ந்து கதைச் சொல்லுங்கண்ணா..

நூல் வாங்க
9865442435




திரு இரா.மதிராஜ்

# அப்பர் திருநாவுக்கரசு நாயனார்

## கட்டுரை

திருவாமூரில் வேளாளர் குடியில் பிறந்தார்.தந்தையார் பெயர் புகழனார். தாயார் பெயர் மாதினியார். இவரது பிள்ளைத் திருநாமம் "மருள்நீக்கியார்" என்பதாகும். இளமையில் பெற்றோரை இழந்த மருள் நீக்கியாரைத் தமக்கை திலகவதியார் அன்போடு வளர்த்தார்.




### அப்பர் சமணராதல்

சைவ சமயத்தில் பிறந்தும் மருள்நீக்கியார் சமண சமயத்தால் ஈர்க்கப்பட்டார். பாடலிபுரம் சென்று சமண நூல்களை நன்கு பயின்றார். இவரது புலமையைச் சமணர் புகழ்ந்தனர். அவரைத் தம் தலைவராக்கினர். தருமசேனர் எனப் பெயரிட்டு அழைத்தனர். இதையெல்லாம் அவரது தமக்கையார் கொஞ்சமேனும் விரும்பவில்லை. தம்பியார் மீண்டும் சைவநெறிக்கு வரவேண்டும் என விரும்பினார்.

### வயிற்றுவலியால் துன்புறல் :

திருவருளால் மருள் நீக்கியாருக்குத் தாங்க முடியாத சூலை நோய் எனப்பட்ட அந்த வயிற்றுவலியால் அவர் துடிதுடித்தார். குடைந்து குடைந்து நோயின் கொடுமை கூடியது. என்ன செய்வார்? தமக்கையாரே தஞ்சமென்று திலவதியாரிடம் சென்றார். நோயின் துன்பத்திலிருந்து தன்னைக் காப்பாற்றும்படி அழுது கேட்டார்.

### முதல் தேவாரப் பாடல் பிறந்தது

திலகவதியார் தம்பியாரை வீரட்டானேசுவரர் கோயிலுக்கு அழைத்துச் சென்றார். 'நமசிவாய' என்னும் திருவைந்தெழுத்தை ஓதித் திருநீற்றை அள்ளிக் கொடுத்தார். "தம்பி! இறைவனிடம் உன் குறையைச் சொல்லு", என்றார்.

அ. வில்சன், இதழாசிரியர்

"வீரட்டானத்து அம்மானே! யமன் போன்ற இந்த நோயை அகற்றிவிடும். முறுக்கி முடக்கி என்னைத் துன்புறுத்துகிறது. என்னால் தாங்க முடியவில்லையே! அறியாமல் பிழை செய்தேன். இரவும் பகலும் உம்மை வணங்குவேன். இந்த நோயிலிருந்து என்னைக் காப்பாற்றுவீர்!" என்றவாறு கொல்லிப் பண்ணில் தேவாரம் பாடினார். இதோ! இவர் பாடிய முதல் தேவாரப் பாடல்:

பண்: கொல்லி

கூற்றாயினவாறு விலக்ககிலீர்!
கொடுமை பல செய்தன நானறியேன்,
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன்! அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே!

(நான்காம் திருமறை, 4150)

(கூற்றாயினவாறு = கூற்றுவனைப் போல (கூற்று = யமன்), தோற்றாது = நோய் முதல் புலப்படாது, அகம்படியே = உள் உறுப்புகளையே, துடக்கி முடக்கியிட = செயல்படாமல் முடக்குதலால்)

தேவாரப் பதிகத்தின் பத்துப் பாடல்களைப் பாடி முடித்தார். சூலை நோய் தானாக அகன்றது. இனிமையான தமிழில் பாமாலை பாடியதால் "நாவுக்கரசர்" என்றழைக்கப்பட்டார். நாவுக்கரசரும் சிவநெறி நின்று மகிழ்ந்தார்.

சமணர்கள் கோபத்தால் வெகுண்டு எழுந்தனர். சமண சமயத்தை விட்டுச் சென்ற நாவுக்கரசரைத் தண்டிக்க முயன்றனர். மன்னன் சமண சமயச் சார்புடையவன். எனவே நாவுக்கரசரைத் தண்டித்தான்.

**சுண்ணாம்புக் காளவாய் :**

நாவுக்கரசரைக் கொடும் சுண்ணாம்பு அறையில் அடைத்தார். சிவபெருமானின் இணையற்ற திருப்பாதங்களை நிழலாக நினைத்த நாவுக்கரசருக்குச் சுண்ணாம்பின் வெப்பம் ஒன்றும் செய்யவில்லை. அவருக்கு அது எப்படி இருந்தது தெரியுமா? இனிமையான வீணை இசையும், மாலை நிலாவும், வீசும் தென்றலும், குளிர்ச்சியான பொய்கையும் போன்று இதமாக இருந்தது. இதை அவர் இப்படி, அழகாகப் பாடி இன்புற்றார்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

(ஐந்தாம் திருமுறை, 6112)

(மாசில் = குற்றமில்லாத, மாலை மதியம் = மாலைநேரத்தில் தோன்றும் முழுமதி, தென்றல் = தென்றல் காற்று,(இதமான காற்று) வீங்கு = பெருகிய, வண்டறை = வண்டுகள் மொய்க்கின்ற)

**கல்லோடு கடலில் எறிந்தது**

கடைசி முயற்சியாக நாவுக்கரசரைக் கல்லோடு கயிற்றால் கட்டினார்கள். ஆழ்கடலில் வீசி எறிந்தார்கள். எமக்குத் துணை ஐந்தெழுத்தாகிய "நமசிவாய" என்று துதித்தார் நாவுக்கரசர். சிவ அன்பில் ஊறிய நம்பிக்கையில் தேவாரம் பாடினார். காந்தார பஞ்சமப் பண்ணில் பாடிய அப்பாடல்.



பண் : காந்தார பஞ்சமம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணையாவது நம சிவாயவே

# அப்பர் திருநாவுக்கரசு நாயனார்

கட்டுரை

## நாவுக்கரசர் அப்பராதல்:

நாவுக்கரசர் பல சிவ தலங்களைத் தரிசித்துச் சிவத்தொண்டுகள் செய்தார். சிவன் பெருமையை வாயாரப் பண்ணோடு பாடினார். இவ்வாறு தம் வாழ்நாட்களைக் கழித்தார். இவ்வாறிருக்கையில் நாவுக்கரசரின் சிவத்தொண்டுகள் பற்றிக் கேள்வியுற்றார் சம்பந்தர். அவரைக் காண வேண்டும் என விழைந்தார். நாவுக்கரசர் ஒருதடவை சீர்காழி வந்தார். சம்பந்தர் அவரை அன்புடன் வரவேற்றார். அப்பொழுது நாவுக்கரசர் சம்பந்தர் கால்களைத் தொட்டு வணங்கினார். தம்மில் வயதில் முதிர்ந்த நாவுக்கரசரை அன்போடு "அப்பரே" என்று அழைத்தார் சம்பந்தர்.

இருவரும் அன்பினால் பிணைக்கப்பட்டனர். அதுமுதல் நாவுக்கரசரை எல்லோரும் "அப்பர்" என்று அழைத்து மகிழ்ந்தனர்.

## திருக்கோயில் பாடல்கள்

அப்பர், சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பல கோயில்களுக்கும் சென்றார். இறைவனை மனமுருகிப் பாடினார். திருக்கருப்பறியலூர், திருப்புன்கூர், திருநீடூர், திருக்குறுக்கைவீரட்டம், திருநின்றியூர், திருநனிபள்ளி, திங்களூர், திருவாரூர், திருப்புகலூர், திருமறைக்காடு என ஏராளமான கோயில்களுக்குத் தலயாத்திரை சென்றார். அவ்வத் திருக்கோயில் பெருமானைக் கனிந்து உருகிப் பண்ணிசைத்துப் பாடினார்.

## உழவாரப்பணியும் கடவுளைக் காணலும்

கோயிலின் வளாகத்தில் உள்ள புல்பூண்டுகளை அகற்றித் தூய்மைப்படுத்துதல், இப்பணிக்குப் பயன்படும் கருவி உழவாரப்படை.

நீண்ட காலம் இம் மண்ணுலகில் வாழ்ந்த அப்பர் ஏராளமான தேவாரப் பதிகங்கள் பாடினார். கையில் உழவாரக் கருவி ஏந்திக் கோயில் திருவீதிகளைச் சுத்தம் செய்தார். கல், முள், பொன், மணி என எது இருந்தாலும் அவற்றை உழவாரத்தால் அகற்றினார். பொன்னும் மணியும் கூட அவரைப் பொருத்தவரை

அ. வில்சன், இதழாசிரியர்

## கடைசிப் பாடல்

இறுதியாக அப்பர் திருப்புலூர் என்னும் தலத்தை அடைந்தார். "எண்ணுகேன்" எனத் தொடங்கிப் பாடினார். "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்" எனப் பாடித் தேவாரப் பதிகத்தை முடித்தார். இதுவே அப்பர் பாடிய கடைசித் தேவாரப் பதிகமாகும். அப்பர் தமது 81 ஆவது வயதில் திருப்புகலூரில் இறைவனடி எய்தினார்.



எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே

(ஆறாம் திருமுறை, 7215)

(கண்ணிலேன்= வேறுகாட்சியில்லேன், ஒண்ணுளே= வாழ்வதற்குப் பொருந்திய உறையுளாகிய உடம்பு, ஒன்பது வாசல் = ஒன்பது துவாரங்கள் (வளைகள்)

நாளை

# நமதே

அனுபவம்

மெதுவாகதான்

வாழ்க்கையை

கற்றுக் கொடுக்கும்

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை




தொடர்பிற்கு :

9597887847
8870884969


## அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com